கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**51/2021**

நாள் : 20.03.2025

வா.சா.**1 -** முத்துமாரி

**5** ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

நான் வழக்கு சொத்து குடும்பசொத்துக்கள் என்பதால் எனது 1/4 பங்கை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி எனது தாயார். எனது பிராதில் வழக்கு சொத்துக்ள் அனைத்தும் எனது அம்மாவிற்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன். நான் வழக்கு சொத்துக்களுக்கு செட்டில்மென் ஆவணங்களோ, அ பதிவேடு ஆவணங்களோ தாக்கல் செய்தேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா மட்டும்தான் தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே மக்கள் நீதிமன்றத்தில் பேச்சுவார்த்தை சமரச உடன்படிக்கை ஏற்பட்டது என்றால், சரியல்ல. அந்த சமரச உடன்படிக்கை அடிப்படையில் 1ம் பிரதிவாதி எனக்கு கடந்த 14.12.2015ம் தேதி ஒரு தானசெட்டில்மென்ட் ஆவணம் எழுதிகொடுத்தார் என்றால், Stay vacate செய்வதற்காக எழுதிகொடுத்தார். எனக்கு தமிழ் படிக்க தெரியும். எனக்கு அம்மா எனக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணத்தில் அந்த சொத்துக்கள் அனைத்தும் அவர் கிரையம் பெற்றதாக கிரைய ஆவணங்களில் விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால், அந்த சொத்தை வாங்குவதற்கு எனது ஆச்சி லட்சுமிஅம்மாள் பணம் கொடுத்தார். எனது பாட்டி லட்சுமிஅம்மாள் பணம் கொடுத்ததாக பிராதிலும், நிருபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், (சாட்சி பதிலளிக்கவில்லை). வா.சா.ஆ.4 ஆவணத்தில் எங்கேயும் சொத்துக்கள் எனது அம்மாவிற்கு பூர்விக பாத்தியம் என்று சொல்லப்படவில்லை என்றால், தெரியாது. தானசெட்டில்மென்ட் ஆவணத்தின்படி எனக்கு 2 லக்க சொத்துக்கள் எனது தாயார் எழுதிகொடுத்தார் என்றால், சரிதான். அதில் 1545/1 மற்றும் 1545/2ஏ என்ற இரண்டு சர்வே எண்கள் எழுதிகொடுக்கப்பட்டது என்றால், சரிதான். நான் பாகம்கேட்கும் வழக்கில் 1545/2ஏ மட்டும்தான் காட்டியுள்ளது என்றால், சரிதான். ஏன் 1545/1 சேர்க்கவில்லை என்றால், எனது அம்மா எழுதிகொடுத்ததால்

சேர்க்கவில்லை. எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டு அதுபடி என்னுடன் பிறந்த 2 மற்றும் 3 பிரதிவாதிகள், 4ம் பிரதிவாதிக்கு சில சொத்துக்களை தானம் எழுதிகொடுத்துள்ளார் என்றால், நீதிமன்ற உத்தரவு என்று சொல்லி போலியாக பதிவுசெய்துள்ளார்கள். அந்த தானசெட்டில்மென்ட் ஆவணங்களில் முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவுப்படி என்ற வாசகங்கள் உள்ளது, ஆனால் உத்தரவு இல்லை. அந்த தானசெட்டில்மென்ட் அடிப்படையில்தான் 4ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு வழக்கு 1 வது தபசில் 5,6 இலக்க சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்றால், அதை எதிர்த்துதான் நான் 5ம் பிரதிவாதியை வழக்கில் சேர்த்துள்ளேன். 5ம் பிரதிவாதி நல்லெண்ணம் அடிப்படையில் கிரையம் வாங்கினார் என்றால், சரியல்ல. கிரையப்படி வருவாய்துறையில் பட்டா 5ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால், ஒரே நாளில் பட்டா மாற்றியுள்ளார். 5ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றத்தை நான் இதுவரை ஆட்சேபனை செய்யவில்லை என்றால், சரியல்ல. பிராது அடிப்படையில் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.